செ.வெ.எண்:30/ஜூன் நாள்:14.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# தேர்தல் செலவின இறுதிப் பட்டியல் சமர்ப்பிப்பது தொடர்பான ஆலோனைக் கூட்டம்

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்

# தேர்தல் செலவின பார்வையாளர்கள் டாக்டர்.பிரதாப் நாராயண சர்மா, டாக்டர்.ஜிஜேந்திர சிங், டாக்டர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (14.06.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் டாக்டர்.பிரதாப் நாராயண சர்மா, டாக்டர்.ஜிஜேந்திர சிங், டாக்டர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் செலவின இறுதிப்பட்டியல் சமர்ப்பிப்பது தொடர்பாக தேர்தலில் போட்டியிட்ட அனைத்துக்கட்சி வேட்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 -இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்ட அனைத்து கட்சி வேட்பாளர்களும் தங்களது தேர்தல் செலவின இறுதிக் கணக்கினை எதிர்வரும் 18.06.2016-க்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். தேர்தல் செலவினங்கள் தொடர்பான இணைப்புபடிவம் I முதல் IV வரையிலும் மற்றும் 1 முதல் 9 வரையிலும் உள்ள வகைபாடு வாரியாக சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் மின்னணு முறையில் செலவு கணக்கை பதிவு செய்ய உரிய அறிவுரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ராமையா உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**